


FLASH **அமெரிக்க தடையால் இலங்கைக்கு நட்டம்**




**செய்தி** Share 23

**த.தே.கூ.வின் வெற்றி சர்வதேசத்துக்கும் அரசுக்கும் விடுக்கப்பட்ட தெளிவான செய்தி**

[ ஞாயிற்றுக்கிழமை, 24 யூலை 2011, 11:40.26 AM GMT ]



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்ததன் மூலம் தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெளிவான செய்தியை உரத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இணைச் செயலாளரும் உத்தியோகபூர்வ பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரனால் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசு போர்க்குற்றங்களை இழைத்திருக்கிறது எனவும், இது தொடர்பாக நீதியான விசாரணை தேவை எனவும் வற்புறுத்தி வரும் மிக முக்கியமான காலகட்டத்திலேயே இத்தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

சர்வதேச சமூகம் கொடுத்து வரும் இந்நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்காக அரசு உள்ளூராட்சித் தேர்தல்களில் வென்று தமிழ் மக்கள் தம் பக்கம் என்று காட்டுவதற்காகப் பெரும் பாடுபட்டது.
அரச இயந்திரம் முழுவதையும் களமிறக்கி உள்ளூராட்சித் தேர்தலை ஒரு யுத்தம் போல எதிர் கொண்டது. இலவசங்களை அள்ளி வீசியது. வேலைவாய்ப்புகளை வழங்குவதாக வெற்று வாக்குறுதிகளை அளித்தது. வேட்பாளர்களை என்ன விலை கொடுத்தேனும் வாங்க முயற்சித்தது.

அவர்களை அச்சுறுத்தித் தேர்தலிலிருந்து விலக வைக்க முயற்சித்தது. உளவியல் ரீதியான பீதியை ஏற்படுத்திப் பொதுமக்களை வாக்களிப்பில் கலந்துகொள்ள விடாமல் தடுத்தது. வாக்காளர்கள் மீது கழிவு எண்ணெய் ஊற்றித் தாக்குதலும் நடத்தியது.

ஆனால் ஆசை வார்த்தைகளையும், அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பெரும் வெற்றிபெறச் செய்துள்ளனர். அரசையும் அதன் தரப்பினரையும் படுதோல்வி அடைய செய்துள்ளனர்.

வடக்கு கிழக்கு இணைந்த தமது தாயகத்தில் சகல அதிகாரங்களுடன் கூடிய அரசியல் சுயாட்சி வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. எந்த சலுகைகளுக்காவும் அச்சுறுத்தல்களுக்காகவும் தங்கள் அரசியல் அபிலாசையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற செய்ததன் மூலம் மீண்டும் ஒரு முறை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் ஜனநாயக பூர்வமான தீர்வுக்கு தலை வணங்கி, இனி மேலும் காலம் தாழ்த்தாது அரசியல் தீர்வினை முன்வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கிறது.

தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ததன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையில் முன்மொழியப்பட்டுள்ள அரசின் போர்க்குற்றங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் பாரபட்சமற்ற சர்வதேச விசாரணை தேவை என்பதை ஏற்று வழிமொழிந்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் இந்த தீர்ப்புக்கு மதிப்பளித்து இலங்கை அரசு சர்வதேச விசாரணையை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கின்றது. தமிழ் மக்கள் தமது தாயகத்தில் கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கு ஏற்ற அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் இலங்கை அரசைச் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வற்புறுத்த வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கிறது.

எமது வேண்டுகோளை ஏற்றுப் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் வாக்குச் சாவடிகளுக்குச் சாரி சாரியாகச் சென்று தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை ஒரு தேசியக் கடமையாக நிறைவேற்றி வைத்த தமிழ் மக்களுக்குக் கூட்டமைப்பு தனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது' என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



**பிந்திய 5 செய்திகள்**

**வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 17 சபைகளை**

**உலகம்**

**34 விரல்களுடன் பிறந்த அதிசய குழந்தை: கின்னஸ்**

இன்றைய செய்திகள் - 25-07-2011 திங்கட்கிழமை

| ஞாயிற்றுக்கிழமை | சனிக்கிழமை | வெள்ளிக்கிழமை |
| --- | --- | --- |
| வியாழக்கிழமை | புதன்கிழமை | செவ்வாய்க்கிழமை |

advertisements










**சிறப்புச் செய்திகள்**


**24-07-2011 16:38**
தேர்தலில் வெற்றிபெற்ற த.தே.கூ. உறுப்பினர்கள் கிளிநொச்சியில் பதவியேற்பர் - இரா.சம்பந்தன்



**24-07-2011 12:41 [ ]**
தேர்தல் முடிவுகள் எல்லோருடைய கண்களையும் திறக்கச் செய்துள்ளது! - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



**24-07-2011 12:33 [ ]**
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்: தேர்தல் முடிவுகளை பார்வையிட்ட ஜனாதிபதி



**24-07-2011 10:14 [ ]**
ஈழத்தில் இனக்கொலை, இதயத்தில் இரத்தம் - வைகோ இயக்கிய ஈழப்படம்



**24-07-2011 08:40 [ ]**
விதி வெல்ல வாக்களித்தோம் வலி தந்தாரை தோற்கடித்தோம்....! - சுதந்திரன்



**சிறப்புச் கட்டுரை**

**அமெரிக்கத் தரப்பின் இந்தியப் பயணம்! உள்ளூராட்சி சபைத் தேர்தல்!- இவ்வாரம் நடந்தேறியுள்ள இரண்டு முக்கிய நிகழ்வுகள் - இதயச்சந்திரன்**

[ Saturday, 23-07-2011 16:49:52 ] [ ]



அமெரிக்க இராஜாங்க திணைக்களச் செயலாளர் ஹிலாரி கிளிண்டனின் இந்திய விஜயமும், வடக்கு கிழக்கில் நடை பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலும், ஊடகங்களை நிரப்பிய செய்திகளாக அமைந்துள்ளன.

**மேலும் படிக்க...**

**கைப்பற்றியது!**

[ Monday, 25-07-2011, 02:50.20 AM ]

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 17 சபைகளின் நிர்வாகத்தைக் கைப்பற்றியது. மிகுதியான மூன்று சபைகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசமாகின.

**மேலும் படிக்க...**

**நிலத்திலும் புலத்திலும் ஈழத் தமிழர்களின் தடுக்க முடியாத உரிமைக்கான தொடர் போராட்டம்**

[ Monday, 25-07-2011, 02:30.34 AM ]



எங்கள் மீது சிங்கள இனவெறி அரசு அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு எம் இனத்தை சூறையாடிய கணத்தில் தான் ஈழத் தமிழர்களின் சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்க வேண்டிய தேவை உருவானது.

**மேலும் படிக்க...**

**தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் த.தே.கூட்டமைப்பினர்தான்! தேர்தல் இதனையே நிரூபித்துள்ளது - விக்கிரமபாகு**

[ Monday, 25-07-2011, 02:13.28 AM ]



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் தங்களின் ஏக பிரதிநிதிகள் என வடக்கு மக்கள் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் மூலம் ஆணித் தரமாக முழு உலகத்துக்கும் பறைசாற்றியுள்ளனர்.

இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

**மேலும் படிக்க...**

**வடமராட்சியில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட கணவனும் மனைவியும் வெற்றி**

[ Monday, 25-07-2011, 02:01.05 AM ]



நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடமராட்சியில் இருவேறு சபைகளில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கணவனும் மனைவியும் வெற்றி பெற்றுள்ளனர்.

**மேலும் படிக்க...**

**இலங்கையின் கொலைக்களம் காணொளி குறித்து விசாரித்தபோது கண்கலங்கிய சந்திரிகா**

[ Monday, 25-07-2011, 01:32.27 AM ]



கொழும்பில் நேற்று நடைபெற்ற மறைந்த முன்னாள் நீதியரசர் அனந்த் பாலகிட்ணரின் நினைவுப் பேருரையில் சொற்பொழிவாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையின் இறுதிக்கட்டத்தின் போது கண் கலங்கியதுடன் தழுதழுத்த குரலில் உரையாற்றினார்.

**மேலும் படிக்க...**

**புத்தகத்தில் இடம் பெற்றது**

[ Monday, 25-07-2011 07:50:25 ]



கின்னஸ் சாதனை என்பது பெருமைக்குரிய விடயம் தான். ஆனால் இந்தியாவின் உத்தரபிரதேசத்தை சேர்ந்த மனோஜ் சக்சேனாவுக்கு அது வேதனை.

**செய்திகளை படிக்க...**

## இந்தியா

**தனிதெலுங்கானா கோரி அனைத்து கட்சி எம்.எல்.ஏ.க்கள் மீண்டும் ராஜினாமா**

[ Monday, 25-07-2011 07:38:25 ]



ஆந்திராவை பிரித்து தனிமாநிலம் அமைக்க கோரி தெலுங்கானாவை சேர்ந்த அனைத்து கட்சி எம்.எல்.ஏ.க்கள் சில நாட்களுக்கு முன்பு ராஜினாமா செய்தனர்.

**செய்திகளை படிக்க...**

## விளையாட்டு

**கவுதம் காம்பீர் காயம் தீவிரமில்லை இன்று களமிறங்குவார்: மேலாளர் அனிருத் சவுத்ரி**

[ Monday, 25-07-2011 08:19:25 ]



களத்தடுப்பு செய்யும் போது காயம் பட்ட கவுதம் காம்பீர் காயம் தீவிரமானது இல்லை என்றும் அதனால் அவர் இன்று களமிறங்குவார் என்றும் இந்திய கிரிக்கட் அணி மேலாளர் அனிருத் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

**செய்திகளை படிக்க...**

## தொழிநுட்பம்

**கூகுள் ப்ளஸ் நண்பர்களை தடை செய்வதற்கு**

[ Monday, 25-07-2011 07:21:25 ]

பேஸ்புக்கை காட்டிலும் கூகுள் பிளஸ் சமூக இணையதளம் உபயோகப்படுத்த மிகவும் சுலபமாக உள்ளது.

**செய்திகளை படிக்க...**

## சினிமா

**தமிழால் ரீமாவுக்கு கிடைத்த வாய்ப்பு**

[ Monday, 25-07-2011 08:09:25 ]



ராம் பிக்சர்ஸ் சார்பில் தயாரிப்பாளர் டொக்டர் வி.ராமதாஸ் தயாரிப்பில், நாயகன் பரத் - நாயகி ரீமா கலிங்கல் இருவரின் நடிப்பில் "யுவன் யுவதி" விரைவில் வெளிவர உள்ளது.

**செய்திகளை படிக்க...**

**அறிவித்தல்கள்**

மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பெ | கணேசன் புவனேஸ்வரி |
| பி | கரவெட்டி கரணவாய் |
| வா | மானிப்பாய் |
| தி | 25 யூலை 2011 |

மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பெ | கந்தையா சுப்பிரமணியம் |
| பி | ஒமந்தை நாம்பன்குளம் |
| வா | வவுனியா திருநாவற்குளம் |
| தி | 24 யூலை 2011 |

அகாலமரணம்




| | |
|---|---|
| பெ | ராமதாஸ் சாரதா |
| பி | மருதங்கேணி |
| வா | ஜேர்மனி Bielefeld |
| தி | 24 யூலை 2011 |

மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பெ | இராயப்பு அமலநாயகம் |
| பி | முல்லைத்தீவு செல்வபுரம் |
| வா | பிரான்ஸ் Saint Deins |
| தி | 24 யூலை 2011 |

மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பெ | கனகரட்ணம் லட்சுமி |
| பி | வேலணை மேற்கு |
| வா | நல்லூர் |
| தி | 24 யூலை 2011 |

மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பெ | விஜயரெட்ணம் தங்கப்பொன்னான் |
| பி | சம்பூர் |
| வா | கிளிவெட்டி, லண்டன் |
| தி | 24 யூலை 2011 |

மரண அறிவித்தல்



| | |
|---|---|
| பெ | தம்பு நடராஜா |
| பி | மீசாலை |
| வா | சாவகச்சேரி சங்கத்தானை |
| தி | 23 யூலை 2011 |

மரண அறிவித்தல்

| | |
|---|---|
| பெ | அருளப்பு அமலதாஸ் |

| | |
|---|---|
| பி | யாழ் ராஜேந்திராவீதி |
| வா | சுண்ணாகம் |
| தி | 23 யூலை 2011 |



மரண அறிவித்தல்

| | |
|---|---|
| பெ | சற்குணம் இராஜலட்சுமி |
| பி | யாழ் சுதுமலை |
| வா | நல்லூர், சுவிஸ் |
| தி | 23 யூலை 2011 |



மரண அறிவித்தல்

| | |
|---|---|
| பெ | சுந்தரம் யோகராஜா |
| பி | கம்பர்மலை |
| வா | கனடா Montreal |
| தி | 22 யூலை 2011 |



31ம் நாள் நினைவஞ்சலி

| | |
|---|---|
| பெ | ஜஸ்மன் பெனடிட் |
| பி | யாழ்ப்பாணம் |
| வா | இந்தியா திருச்சி |
| தி | 22 யூலை 2011 |



மரண அறிவித்தல்

| | |
|---|---|
| பெ | சிவதாசன் பகீரதியம்மா |
| பி | வல்வெட்டித்துறை |
| வா | காங்கேசன்துறை |
| தி | 22 யூலை 2011 |




1ம் ஆண்டு நினைவஞ்சலி

| | |
|---|---|
| பெ | திரவியவதனி யோகேஸ்வரன் |
| பி | யாழ் எழுதுமட்டுவாள் |
| வா | கனடா Scarborough |
| தி | 22 யூலை 2011 |



மரண அறிவித்தல்

| | |
|---|---|
| பெ | லீனஸ் சூசைப்பிள்ளை |
| பி | ஊர்காவற்றுறை உதயதிசை |
| வா | கனடா ஸ்காபரோ |
| தி | 21 யூலை 2011 |



31ம் நாள் நினைவஞ்சலி

| | |
|---|---|
| பெ | A.F.வலன்ரைன் சந்திரன் |
| பி | ஊர்காவற்துறை கிழக்கு |
| வா | சுவிஸ் - Zurich |
| தி | 21 யூலை 2011 |



மரண அறிவித்தல்

| | |
|---|---|
| பெ | செல்லையா ஜெகதீஸ்வரன் |
| பி | புன்னாலைக்கட்டுவன் |
| வா | கனடா ரொரன்ரோ |
| தி | 21 யூலை 2011 |



அகாலமரணம்

| | |
|---|---|
| பெ | பாமா நீலாயமூர்த்தி |
| பி | வல்வெட்டித்துறை |
| வா | திருச்சி |
| தி | 20 யூலை 2011 |



2ம் ஆண்டு நினைவஞ்சலி

| | |
|---|---|
| பெ | அனுஷாந் இந்திரகாந்தன் |

| | | |
|---|---|---|
| பி | கனடா |  |
| வா | கனடா | |
| தி | 20 யூலை 2011 | |

அகாலமரணம்

| | | |
|---|---|---|
| பெ | நந்தகுமார் கதிர்ச்செல்வன் | |
| பி | புங்குடுதீவு, கிளிநொச்சி |  |
| வா | கனடா | |
| தி | 19 யூலை 2011 | |

Find us on

Copyright 2005-11 © TamilWin.com, All rights reserved. RSS 5 News RSS 10 News

எம்மைப் பற்றி
தேடல்
விளம்பரம் செய்ய
ஆவணங்கள்
உங்கள் கருத்து
செய்தி அனுப்ப
தொடர்புகளுக்கு